செய்தி வெளியீடு எண் : 1593 நாள் : 14.09.2022

## செய்தி வெளியீடு

### பேரறிஞர் அண்ணா அவர்களின் 114ஆவது பிறந்த நாள் விழா

பேரறிஞர் அண்ணா அவர்களின் 114ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் 15.09.2022 அன்று காலை 8.00 மணிக்கு சென்னை, அண்ணாசாலை, வாலாஜா சாலை சந்திப்பில் அமைந்துள்ள, அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, அருகில் அலங்கரித்து வைக்கப்படவுள்ள அன்னாரது திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மலர்தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் காஞ்சிபுரத்தில் நடராஜர் – பங்காரு அம்மாள் தம்பதியினருக்கு 15.09.1909 அன்று மகனாகப் பிறந்தார். பேரறிஞர் அண்ணா அவர்கள் எளிய குடும்பத்தில் பிறந்து நல்ல மாணவராகவும், சிறந்த எழுத்தாளராகவும், ஆற்றல் மிக்க பேச்சாளராகவும், பண்பட்ட அரசியல்வாதியாகவும், உத்தமத் தலைவராகவும் திகழ்ந்தார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தனது சிறந்த பேச்சாற்றல் மூலம் மக்களிடையே அறிவுப் புரட்சியை ஏற்படுத்தினார். "கடமை, கண்ணியம், கட்டுப்பாடு" என்கின்ற கோட்பாட்டை மக்களிடையே விதைத்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். மாற்றாரையும் மதிக்கக் கற்றுத்தந்த மாபெரும் தலைவர்.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களையே தன் தலைவராக கொண்ட பேரறிஞர் அண்ணா அவர்கள், தனது ஆட்சிக்காலத்தில் ஏழை, எளிய மக்கள் முன்னேற்றம் அடையும் வகையில் சிறப்பான பல திட்டங்களை வழங்கினார். தாய் மொழி மீது கொண்ட அளவற்ற பற்றின் காரணமாக, "சென்னை மாகாணம்" என்று அழைக்கப்பட்ட நமது மாநிலத்தை "தமிழ்நாடு" எனப் பெயர் மாற்றம் செய்தார்.

இந்தியாவிலேயே முதன் முதலாக அரசுப் பேருந்துகள் நாட்டுடைமையாக்கப்பட்டன இவருடைய ஆட்சிக்காலத்தில் தான். கல்வியில் தமிழுக்கு முதலிடம் வழங்கினார். 1968ஆம் ஆண்டு இரண்டாம் உலகத் தமிழ்மாநாட்டை நடத்தினார். மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற தத்துவத்தை வழங்கி தமிழகத்தை முன்னேற்றச் சிறப்புடன் செயல்பட்டார்.

1967ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம் நாள், சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் 'தமிழ்நாடு அரசு – தலைமைச் செயலகம்' என மாற்றம் செய்தார். தமிழக அரசின் முத்திரையான கோபுரச் சின்னத்தில் இருந்த 'கவர்மெண்ட் ஆஃப் மெட்ராஸ்' என்ற ஆங்கில வாக்கியம் நீக்கப்பட்டு, 'தமிழ்நாடு அரசு' என

மாற்றினார். தமிழ்நாடு அரசு பயன்படுத்தும் அரசு முத்திரையில் 'வாய்மையே வெல்லும்' என்ற சொல்லை இடம் பெறச் செய்தார்.

"ஏழையின் சிரிப்பில், இறைவனைக் காண்போம்" என்ற சொல்லின் அடிப்படையில் தமிழக மக்கள் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டார். சொல்லாலும், எழுத்தாலும் பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்தும், மக்கள் மனதில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக்காலத்தில், பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவினை நனவாக்கிடும் வகையில், கிராமங்கள் புத்துணர்வு பெற அண்ணா மறுமலர்ச்சித்திட்டம், பேரறிஞர் அண்ணா அவர்களின் புகழுக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில், கடற்கரையில் நினைவிடம், தெற்காசியாவிலேயே மிகப்பெரிய அண்ணா நூற்றாண்டு நூலகத்தை சென்னையில் அமைத்தார்.

தமிழ்நாடு அரசின் சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 114ஆவது பிறந்த நாள் விழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது. இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in